වාර්ෂික වාර්තාව - 2022

வருடாந்த அறிக்கை - 2022

ANNUAL REPORT - 2022

සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය

මුදල්, ආර්ථික ස්ථායීකරණ හා ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය

நலன்புரி நன்மைகள் சபை

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு

Welfare Benefits Board

Ministry of Finance, Economic Stabilization and National Policies

உள்ளடக்கம்

➢ **சுருக்கப் பெயர்கள்**

அத்தியாயங்கள்

4. ஆம் அத்தியாயம் - நிறுவனம்

1.1 நோக்கு *01*

1.2 செயற்பணி *01*

4.3 நிறுவனத்தின் குறிக்கோள்கள் *01*

4.4 நிறுவனத்தின் பணிகள் *01-02*

4.5 நிறுவனக் கட்டமைப்பு *02*

1.6 பணிப்பாளர் சபை *03*

5. ஆம் அத்தியாயம் - சட்ட வரைசட்டகம்

2.1 நிறுவனத்தைத் தாபிப்பதற்குரிய சட்டரீதியான பின்னணி *04*

6. ஆம் அத்தியாயம் -தலைவரின் விவரணம் ***05***

4. ஆம் அத்தியாயம் - செயலாற்றுகை

4.1 வருடாந்த நடவடிக்கை திட்டம் - 2022 *6-7*

4.2 செயலாற்றுகை *7-8*

4.3 செயலாற்றுகை பற்றிய மீளாய்வு *9-10*

5. ஆம் அத்தியாயம் - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

5.5 நிதிச் செயலாற்றுகை பற்றிய வரவுசெலவு *11*

5.6 நிதிச் செயலாற்றுகை பற்றிய நிதி அறிக்கை *12-17*

5.7 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை *18-23*

5.8 கணக்காய்வாளர் அறிக்கைக்கு அமைவாக விடயங்களுக்கான விளக்கம் *24-25*

6. ஆம் அத்தியாயம் - மனித வள விவரம் ***26***

7. ஆம் அத்தியாயம் - பொறுப்புக்களை நிறைவேற்றும் போது முகங்கொடுத்த சவால்கள் மற்றும் பிரச்சனைகள் *27*

சுருக்கச் சொல்

- WBB – *நலன்புரி நன்மைகள் சபை*
- WBB Act – *இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டம்*
- WB – *உலக வங்கி*
- WBIU – *லன்புரி பயனாளிகள் தகவல் அலகு*
- WBS – *நலன்புரி நன்மைத் திட்டம்*
- BCP – தொழில் தொடர்ச்சி திட்டம்
- DRMS – *அனர்த்த மீட்பு முகாமைத்துவ முறைமை*
- DSD – *பிரதேச செயலகப் பிரிவு*
- HR - *மனித வளம்*
- MSD – *முகாமை சேவைகள் திணைக்களம்*
- ITC – *தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்*
- ICTA – *தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை*
- IIL – இன்பொமெடிக்ஸ் இன்டநெஷனல் லிமிடட்
- IT - *தகவல் தொழில்நுட்பம்*
- IWMS – *ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ முறைமை*
- IEC – *தகவல் கல்வி மற்றும் தொலைத்தொடர்பு*
- SSNP – *சமூக பாதுகாப்பு வலைக் கருத்திட்டம்*
- SRIS – *சமூக பதிவக தகவல் முறைமை*
- SRU – *சமூகப் பாதுகாப்பு தகவல் அலகு*
- SQL – கட்டமைக்கப்பட்ட விசாரணை மொழி
- PMU – *நிதி அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவ அலகு*
- TOR – *விசாரணை நியதிகள்*

1 ஆம் அத்தியாயம் – நிறுவனம்

1.2 நோக்கு

தேவையான இடங்களில் நிவாரணங்களை வழங்கி இலங்கை ஏழை மக்களின் வாழ்வை நிலையான நிலைக்கு உயர்த்தும் பயணத்தில் முன்னோடியாக மாறுதல்.

1.2 செயற்பணி

சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்குரிய சமூகப் பாதுகாப்பு வலைக் கருத்திட்டம் மற்றும் இலங்கை நலன்புரித் துறையில் மறுசீரமைப்பு சம்பந்தமாக தோன்றுகின்ற தேவைகளை அடையாளம் காணுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பன நலன்புரி நன்மைகள் சபையின் செயற்பணியாக காணப்பட்டது. அதற்கு அமைவாக செயற்பணிக் கூற்று பின்வருமாறு.

"பயனாளிகளைத் தெரிவுசெய்யும் போது வெளிப்படைத்தன்மை மற்றும் சமத்துவம் என்பவற்றை சான்றுப்படுத்தி இலக்கு வைக்கப்பட்ட சகல நன்மைத் திட்டத்திற்கும் ஒத்திசைவான நலன்புரி முகாமைத்துவ முறைமையொன்றினை விருத்திசெய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்."

1.3 *நிறுவனத்தின் குறிக்கோள்கள்*

- *சகல நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளுக்கும் சட்டரீதியான வரை சட்டகமொன்றை தயாரித்தல்.*
- *பயனாளிகளை அடையாளம் காணுவதற்காக வெளிப்படைத்தன்மையைக் கொண்ட செயல் முறையொன்றை தயாரித்தல்.*
- *அவ்வாறான நன்மைகளை முடிவுறுத்துவதற்காக நிதி ஏற்பாடுகளைச் செய்தல்.*

1.4 *நலன்புரி நன்மைகள் சபையின் பணிகள்*

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பின்வரும் பிரதான பணிகளை நிறைவேற்றுதல்.;

- *சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அல்லது ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல்.*
- *சபைக்கு ஒப்படைக்கப்பட்டள்ள எந்த ஒரு அதிகாரத்தையும், கடமையையும் அல்லது பணியையும் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் அல்லது அரசாங்க உத்தியோகத்தருக்கு ஒப்படைத்தல்.*

- நலன்புரி நன்மைகள் திட்டத்தைத் தாபித்தல்.
- தகைமை பெறுவதற்கான தகுதிறன்களை தயாரித்தல்.
- திட்டத்திற்கு அமைவாக நிதி ஏற்பாடுகளை உறுதி செய்தல்.
- நலன்புரி நன்மைகள் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- இலத்திரனியல் சமூகப் பாதுகாப்பு தரவுத்தளம் ஒன்றைத் தயாரித்து பேணிவருதல்.
- திட்டத்தை ஆரம்பிக்கின்ற திகதியை உறுதி செய்தல்.
- வழங்க வேண்டிய நிதி அல்லது ஏனைய நன்மைகளை உறுதி செய்தல்.
- நபர்களுக்கு நன்மைகள் கிடைக்க வேண்டிய கால எல்லையைக் குறிப்பிடுதல்

1.5 நிறுவனக் கட்டமைப்பு



1.6 பணிப்பாளர் சபை

2022.01.01ஆம் திகதியிலிருந்து 2022.07.06 ஆம் திகதி வரை பணிப்பாளர் சபை இன்றி பதில்கடமை நிறைவேற்றுகின்ற மேலதிக ஆணையாளர் ஒருவரின் கீழ் நலன்புரி நன்மைகள் சபை நிருவகிக்கப்பட்டது.

- *பதில்கடமை புரியும் மேலதிக ஆணையாளர் – திரு. எம்.எம்.சீ.பி மொஹொட்டிகெதர*

2022.07.07 ஆம் திகதியன்று திரு. பி. விஜயரத்ன அவர்கள் நலன்புரி நன்மைகள் சபையின் தலைவராக நியமிக்கப்பட்ட அதேவேளையில் பணிப்பாளர் சபை பின்வருமாறு.

- *திரு. பி. விஜயரத்ன - தலைவர் / ஆணையாளர்*
- *திரு. கமல் பத்மசிறி - உறுப்பினர்*
- *திரு. ஆர் தேஷப்பிரிய – உறுப்பினர்*
- *திரு. குமார துனுசிங்ஹ – உறுப்பினர்*
- *திருமதி கே. எச். ஜெஸி மலர் - உறுப்பினர்*

இந்த காலப் பகுதியில் ஐந்து பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் இடம் பெற்றுள்ளன.

2 ஆம் அத்தியாயம் - சட்டவரை சட்டகம்

2.1 *நிறுவனத்தைத் தாபிப்பதற்குரிய சட்டரீதியான பின்னணி*

நலன்புரி நன்மைகள் சபை 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தாபிக்கப்பட்ட அதேவேளையில், அது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி 02 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1952/22 இன் கீழ் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்கு அமைவாக நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் அரசியலமைப்பு சபையின் ஆலோசனையுடன் மூன்று வருட காலத்திற்காக சபைக்கு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும். அதன் பிரகாரம், முதலாவது பணிப்பாளர் சபை 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நியமிக்கப்பட்டிருந்தது.

3 ஆம் அத்தியாயம் – தலைவரின் விவரணம்

நலன்புரி நன்மைகள் சபைத் தலைவரின் மீளாய்வு

நலன்புரி நன்மைகள் சபை 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கத்தைக் கொண்ட நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழான பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட்டு இலக்கம் 1952/22 மற்றும் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

சமூக பாதுகாப்பு வலைக் கருத்திட்டம் மற்றும் நலன்புரி நன்மைகள் சபை என்பன ஒருங்கிணைந்து சட்டத்தின் பிரதான நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அதேவேளையில், நலன்புரி நன்மைகள் சபையை தாபிப்பதற்காக உலக வங்கியினால் சமூக பாதுகாப்பு வலைக் கருத்திட்டத்தினூடாக நிதியத்தை வழங்குகின்றது.

நலன்புரி நன்மைகள் சபையின் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், கிராம உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பிரதேச செயலகங்களில் உள்ள துறைசார் கடமைகளை நிறைவேற்றுகின்ற ஏனைய உத்தியோகத்தர்களின் உதவியைப் பெற்றுக்கொள்கின்ற அதேவேளையில், இதன் கீழ் பிரதானமாக அஸ்வெசும நிகழ்ச்சித் திட்டம் தொழிற்படுகின்றது.

இந்த வருடத்தில் அதாவது, 2022 செப்டம்பர் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து அஸ்வெசும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களைக் கோருவது ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளையில், 05 படிமுறையின் கீழ் இந்த நிகழ்ச்சித் திட்டம் தொழிற்படுகின்றது.

இலக்கு வைக்கப்பட்ட மக்களை சரியாக அடையாளம் கண்டு சமூக நலன்புரி தரவுத்தளம் ஒன்றின் தேவையை சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகள் சபை போன்றவை இந்நாட்டிற்கு உதவி வழங்குகின்ற பங்குதாரர்களை உறுதிப்படுத்தியுள்ள அதேவேளையில், அதற்கு அமைவாக, இலக்கம் 2308/08 இலக்கத்தைக் கொண்ட 2022.11.29 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம், 2022 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவத் தொகுதியை (IWMS) தாபித்து அதனூடாக அஸ்வெசும நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்த நலன்புரி நன்மைகள் நிகழ்ச்சித்திட்டத்தை செயல்படுரீதியாக நடைமுறைப்படுத்துவதனை இந்த வருடத்தில் ஆரம்பிக்கக் கூடியதாக இருந்தது. பல்வேறு தரப்பினர்களிடமிருந்து முன்வைக்கப்பட்ட எதிர்ப்புகள் மற்றும் சவால்களுக்கு மத்தியிலும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் முழுமையாக இல்லாதிருந்தபடியினால் அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் பாரிய சிரமங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. அதற்கு அமைவாக IWMS எனும் பெயரில் கணனி முறைமையொன்றை விருத்திசெய்யும் நடவடிக்கையும், பதவியினர்களுக்காக அனுமதியை பெற்றுக்கொள்வதும், ஆட்சேர்ப்பு நடவடிக்கையும், அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய பௌதீக வளங்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளையும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற வேளையிலேயே நிறைவேற்றிக் கொள்வதற்காக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது.

இந்தப் பணிகளை வெற்றிகொள்வதற்கு நிதி அமைச்சர், திறைசேரியின் செயலாளர், பிரதிச் செயலாளர், ஒத்தழைப்பு வழங்கிய நிதி அமைச்சினதும் ஏனைய திணைக்களங்களினதும் உத்தியோகத்தர்கள், நலன்புரி நன்மைகள் சபையினதும் சமூகப் பாதுகாப்பு வலைக் கருத்திட்டத்தினதும் பதவியினர், உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களிலுள்ள சகல உத்தியோகத்தர்களும் எல்லா சந்தர்பங்களிலும் ஒத்துழைப்பினை வழங்கியுள்ளனர்.

பி. விஜயரத்ன
தலைவர்
நலன்புரி நன்மைகள் சபை
2022.12.20

4 ஆம் அத்தியாயம் - செயலாற்றுகை

1.5 வருடாந்தநடவடிக்கை திட்டம்

இலக்கம்	பொறுப்பான துறை	உத்தேச செயற்பாடுகள்	செயற்பாடுகளின் அடைவுகள்	செயற்பாடுகளின் விளைவு
1	நலன்புரி முகாமைத்துவ முறைமை (சமூக பாதுகாப்பு பதிவேட்டை நிறுவுதல்/ விருத்தி செய்தல்/ நடைமுறைப்படுத்துதல்)	கருத்திட்டத்தை நிறைவு செய்தல், வழங்குனருடன் ஒரு வருடத்திற்கு பராமரிப்பு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளுதல்	பொது மக்களுக்காக முழுமையாக செயல்படும் *SRIS*	
	தகவல் முறைமை *(SRIS)*	*SRIS* இற்கான சமூக பாதுகாப்பு வலைக் கருத்திட்டத்தின் மூலம் திரட்டப்பட்ட முன்னோடித் தரவைச் சேர்த்தல் (தரவு சரிபார்ப்பு செல்லிட செயலி மூலம்)	தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களின் மூலம் பெறப்பட்ட தரவுகளை நிறைவு செய்தல்.	
		தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மூலம் தரவுகளை உறுதி செய்தல் *(DCS)*	புள்ளிவிவர செயல்பாடுகளின் இறுதி முடிவுகளைப் பயன்படுத்துதல்	
2	*SRIS* ஒருங்கிணைப்பதற்காக விரிவுபடுத்துதல் நலன்புரி முகாமைத்துவ முறைமை *(IWMS)*	ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ முறைமையை நிறைவு செய்தல் *(IWMS)*	தொழில்நுட்ப ரீதியில் முக்கியமான முறைமையொன்றை விருத்தி செய்தல்	
		IWMS செயற்பாட்டு முறைமையொன்றை ஸ்தாபித்தல்.		
3	நிலைபேறான தன்மையை சான்றுப்படுத்துதல்	கொள்திறன் அபிவிருத்தி (ஆளணி முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் *WBB DSD* மட்டத்தில்)		தொழில்நுட்ப மற்றும் செயற்பாட்டு அறிவைக் கொண்டுள்ள பதவியினர்களை உருவாக்குதல்
		SRIS தொடர்ச்சியாக மேம்படுத்துதல்		பதவியினர் உறுப்பினர்களின் அறிவை விருத்தி செய்தல்
		கொள்கை மற்றும் நடவடிக்கைமுறைகளை தாபித்தல்		கொள்கைகளை மையமாகக் கொண்ட அலுவலக சூழலொன்றை பேணி வருதல்
4	நிறுவன கட்டமைப்பை வலுவூட்டுதல் மற்றும் இற்றைப்படுத்துதல்.	நாளாந்த செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பங்களிப்பு செய்கின்ற நிறுவன கட்டமைப்பை உருவாக்குதல் *WBB* மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டம் வரையிலான *IWMS*		நிறுவனத்தின் சகல பணிகளையும் பேணி வருவதற்கு தேவையான வலுவான நிறுவன கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துதல்
		நிறுவனத்திற்கு தகுதி வாய்ந்த பதவினர்களை ஆட்சேர்ப்பு செய்தல்		முறையான விசேட தன்மையை கொண்ட நிறுவன கட்டமைப்பொன்றைத் தாபித்தல்

5	*IWMS* இற்கான பயனுள்ள தகவல் தொடர்பாடல் முறைமை	முறையான தொடர்பாடல் முறைமையொன்றை தாபித்தல்.		அடிமட்டம் வரையில் வலுவான தொடர்பாடல் முறைமையொன்றை ஏற்படுத்துதல்
		தொடர்ச்சியான செயல்பாடு மற்றும் மேம்படுத்தல் முறைமை		செயற்பாட்டு முறைமையுடன் இணைபிரியாத தொடர்பு
6	சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனான சட்டரீதியான வரைசட்டகத்தை வலுவூட்டுதல் (சமூர்த்தி திணைக்களம், முதியோர் செயலகம், அங்கவீனர் செயலகம்)	நிறுவனங்களுக்கு இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை தயாரித்து கைச்சாத்திடுதல்		நிறுவனங்களுக்கு இடையில் முறையான சட்ட வரைசட்டகத்தை கட்டியெழுப்புதல்
7	*IWMS* இற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வலுவூட்டுதல்	*TAB* கணினிகளுக்கான பெறுகையை நிறைவு செய்தல்		தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் வினைத்திறனை மேம்படுத்துதல்
		332 பிரதேச செயலகங்களுக்கு *TAB* கணனிகளை விநியோகித்தல்		பிரதேச செயலகங்களில் அடிமட்டத்தில் பயிற்சி பதவியினர்
		விநியோகிக்கப்பட்ட *TAB* கணணிகளை தொடர்ச்சியாக செயல்படுத்துதல் மற்றும் விநியோகித்தல்		செயற்பாட்டு முறைமையுடன் இணைபிரியாத தொடர்பு

4.2 செயலாற்றுகை

4.2 நடவடிக்கை திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட செயலாற்றுகை

உபாயத்திட்டம்	நிகழ்ச்சித் திட்டம்	செயற்பாடுகள் / உப செயற்பாடுகள்	செயலாற்றுகை (%)	குறிப்பு
SRIS பற்றிய நம்பகத் தன்மையை வலுப்படுத்துதல்	SRIS பராமரிப்பு ஒப்பந்தம்	• பராமரிப்பு ஒப்பந்தம் WBB மற்றும் IIL ஆகியவற்றுக் கிடையில் ▪ 07 விநியோகம் • IIL இனால் அனுப்பப்பட்ட நிதி முன்மொழிவு • அமைச்சரவை பெறுகை குழுவினால் நிதி முன்மொழிவு அனுமதிக்கப்பட்டுள்ளது. • பராமரிப்பு ஒப்பந்த கடிதத்தை IIL இற்கு ஒப்படைத்தல் • SRIS திருத்தக் கோரிக்கை தீர்மானம் ▪ திருத்தக் கோரிக்கைக்கான தீர்மானத்தை வழங்கும் கூட்டம்	60 %	முதலாவது விநியோகம் நிறைவடைந் துள்ளது
	SRIS ஒப்படைக்கும் செயல்முறை	• கூட்டங்களையும் செயலமர்வுகளையும் நடாத்துதல் • SRIS பராமரிப்பு ஒப்பந்தம் பற்றிய அறிவு பரிமாற்றம்	75 %	WBB ஒப்படைப்பது நிறைவு செய்யப்பட வில்லை
	SRIS நிறைவு செய்தல்	• முதலாவது விநியோகத்தை நிறைவு செய்தல் மற்றும் செலுத்துதல் • முடிவு பெறாத விநியோகத்தில் கடிதப் பிரச்சினைகள்	100 %	WBB இற்கு SRIS விநியோகம் நிறைவு செய்யப்பட வில்லை
	ஸ்பேஸ் சேவையக வசதிகள்	• IWMS முறைமைக்குத் தேவையான ஸ்பேஸ் வசதிகளை நடைமுறைப்படுத்துதல் • ICTA சேவையக உபகரணத்தை வலுவூட்டுதல்	100 %	மைக்ரோசொஃப்ட் அஸூர் ஸ்பேஸ் சேமிப்பகத்திற்கு மாறுவதற்கு முடிவு செய்யப்பட்டது
IWMS பற்றிய நம்பகத் தன்மையை வலுப்படுத்துதல்	செல்லிட தொலைபேசி செயலி மற்றும் LISH முறைமையை அபிவிருத்தி செய்தல்	▪ சமூகப் பாதுகாப்பு கருத்திட்டத்தின் உள்ளக செயலியை விருத்தி செய்தல் ▪ செல்லிட தொலைபேசி செயலி மற்றும் LISH முறைமையை அபிவிருத்தி செய்வதை தீர்மானிப்பதற்கான கூட்டம்	100 %	பூர்த்திசெய்யப்பட் டுள்ளது
பயனுள்ள தொடர்பு தொடர்பாடல்	பொது மக்களுக்கான முறையான தகவல் தொடர்பாடல் முறை	• 1924 நடை முறைப்படுத்துதல் (நலன்புரி நன்மைகள் சபை call center on	75 %	நடந்து கொண்டிருக்கிறது

		this process • இந்த செயல் முறைக்காக அழைப்பு நிலையத்தின் தேவையைப் பூர்த்திசெய்தல்.		
	WBB இணையத் தளத்தை நிறுவுதல்	• புதிய WBB இணையத்தளம் ஒன்றை இயக்குதல் • இணையதள குறியீட்டு முறையை நிறுவுதல்	50 %	நடந்து கொண்டிருக்கிறது
	குறுஞ் செய்தியை அனுப்பும் செயல்முறை (உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளுக்கு)	• குறுஞ் செய்தி வழங்குநர்களைத் தெரிவுசெய்வதற்கான பெறுகை	50 %	நடந்து கொண்டிருக்கிறது
	வாட்ஸ்அப் தொடர்பாடல்	• பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் உத்தியோகத்தர்களின் தொடர்பாடல்	100 %	நாளாந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன

4.4 செயலாற்றுகை பற்றிய மீளாய்வு

இந்த அட்டவணையின் மூலம் 2022 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் பற்றிய விபரம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இலக்கம்	பொறுப்பான துறை	உத்தேச செயற்பாடுகள்	செயற்பாடுகளின் அடைவுகள்	செயற்பாடுகளின் விளைவு
1	நலன்புரி முகாமைத்துவ முறைமை (சமூக பாதுகாப்பு பதிவேட்டை நிறுவுதல்/ விருத்தி செய்தல்/ நடைமுறைப்படுத்து தல்) தகவல் முறைமை (SRIS)	கருத்திட்டத்தை நிறைவு செய்தல், வழங்குனருடன் ஒரு வருடத்திற்கு பராமரிப்பு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளுதல்	பொது மக்களுக்காக முழுமையாக செயல்படும் SRIS	
		SRIS இற்கான சமூக பாதுகாப்பு வலைக் கருத்திட்டத்தின் மூலம் திரட்டப்பட்ட முன்னோடித் தரவைச் சேர்த்தல் (தரவு சரிபார்ப்பு செல்லிட செயலி மூலம்)	தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களின் மூலம் பெறப்பட்ட தரவுகளை நிறைவு செய்தல்.	
		தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மூலம் தரவுகளை உறுதி செய்தல் (DCS)	புள்ளிவிவர செயல்பாடுகளின் இறுதி முடிவுகளைப் பயன்படுத்துதல்	
2	SRIS ஒருங்கிணைப்பதற்காக விரிவுபடுத்துதல் நலன்புரி முகாமைத்துவ முறைமை (IWMS)	ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ முறைமையை நிறைவு செய்தல் (IWMS)	தொழில்நுட்ப ரீதியில் முக்கியமான முறைமையொன்றை விருத்தி செய்தல்	
		IWMS செயற்பாட்டு முறைமையொன்றை ஸ்தாபித்தல்.		
3	நிலைபேறான தன்மையை சான்றுப்படுத்துதல்	கொள்திறன் அபிவிருத்தி (		தொழில்நுட்ப மற்றும்

		ஆளணி முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் WBB DSD மட்டத்தில்)		செயற்பாட்டு அறிவைக் கொண்டுள்ள பதவியினர்களை உருவாக்குதல்
		SRIS தொடர்ச்சியாக மேம்படுத்துதல்		பதவியினர்களின் அறிவை விருத்தி செய்தல்
		கொள்கை மற்றும் நடவடிக்கைமுறைகளை தாபித்தல்		கொள்கைகளை மையமாகக் கொண்ட அலுவலக சூழலொன்றை பேணி வருதல்
4	நிறுவன கட்டமைப்பை வலுவூட்டுதல் மற்றும் இற்றைப்படுத்துதல்.	நாளாந்த செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பங்களிப்பு செய்கின்ற நிறுவன கட்டமைப்பை உருவாக்குதல்WBB மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டம் வரையிலான IWMS		நிறுவனத்தின் சகல பணிகளையும் பேணி வருவதற்கு தேவையான வலுவான நிறுவன கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துதல்
		நிறுவனத்திற்கு தகுதி வாய்ந்த பதவினர்களை ஆட்சேர்ப்பு செய்தல்		முறையான விசேட தன்மையை கொண்ட நிறுவன கட்டமைப்பொன்றைத் தாபித்தல்
5	IWMS இற்கான பயனுள்ள தகவல் தொடர்பாடல் முறைமை	முறையான தொடர்பாடல் முறைமையொன்றை தாபித்தல்.		அடிமட்டம் வரையில் வலுவான தொடர்பாடல் முறைமையொன்றை ஏற்படுத்துதல்
		தொடர்ச்சியான செயல்பாடு மற்றும் மேம்படுத்தல் முறைமை		செயற்பாட்டு முறைமையுடன் இணைபிரியாத தொடர்பு
6	சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனான சட்டரீதியான வரைசட்டகத்தை வலுவூட்டுதல் (சமூர்த்தி திணைக்களம், முதியோர் செயலகம், அங்கவீனர் செயலகம்)	நிறுவனங்களுக்கு இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை தயாரித்து கைச்சாத்திடுதல்		நிறுவனங்களுக்கு இடையில் முறையான சட்ட வரைசட்டகத்தை கட்டியெழுப்புதல்
7	IWMS இற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வலுவூட்டுதல்	TAB கணினிகளுக்கான பெறுகையை நிறைவு செய்தல்		தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் வினைத்திறனை மேம்படுத்துதல்
		332 பிரதேச செயலகங்களுக்கு TAB கணனிகளை		பிரதேச செயலகங்களில் அடிமட்டத்தில் பயி

		விநியோகித்தல்		ற்சி பதவியினர்
		விநியோகிக்கப்பட்ட *TAB* கணணிகளை தொடர்ச்சியாக செயல்படுத்துதல் மற்றும் விநியோகித்தல்		செயற்பாட்டு முறைமையுடன் இணைபிரியாத தொடர்பு

5 ஆம் அத்தியாயம் - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிக் கூற்றுக்கள்

5.1 *நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று (வரவு செலவு)*

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான ஒப்பீட்டு ரீதியான வருமான கூற்று

நலன்புரி நன்மைகள் சபை				
பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திடடச் செயற்படுத்துகை அமைச்சு				
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான ஒப்பீட்டு ரீதியான வருமான கூற்று				
விபரம்	றிப்	**2022**		**2021**
வருமானம்				
அரசாங்க மானியம்	**1**	7,188,000		4,845,000
செலவுகள்				
ஆளுக்குரிய வேதனாதிகள்	**2**	5,672,268		4,540,277
ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள்	**3**	1,258,933		570,244
		6,931,201		5,110,521
ஆண்டுக்கான மிகை/ (பற்றாக்குறை)		**256,799.44**		**(265,521.02)**

5.2 ***நிதிச் செயலாற்றுகை பற்றிய நிதி அறிக்கை***

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதி நிலைமைக் கூற்று

நலன்புரி நன்மைகள் சபை			
பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சு			
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதி நிலைமைக் கூற்று			
		2022	**2021**
	Note	Rs.	Rs.
கூறு 01			
நடைமுறையல்லாத சொத்துகள்			
ஆதனம், பொறித்தொகு‍	04	0.00	11477.75
நடைமுறைச் சொத்துகள்			
காசு மற்றும் காசுக்கு ச	05	289390.74	56086.21
		289390.74	67563.96
நிதியளிக்கப்பட்டது			
தேறிய சொத்து/ பங்குரிமை மூலதனம்			
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபக		4584793.00	4584793.00
ஒன்றுதிரண்ட மிகை/ (பற்றாக்குறை)		-4304256.38	-4522655.82
மொத்த தேறிய சொத்து/பங்குரிமை மூ		280536.62	62137.18
நடைமுறைப் பொறுப்புகள்			
அட்டுறுச் செலவுகள்	06	8854.12	5426.78
		289390.74	67563.96

Financial Statements presented in pages from 1 -3 and other notes to the accounts presented in pages from 4 - 10 are form integral parts of the Financial statements. We hereby certify that figures in these Financial StatementsNotes to accounts have been prepared in accordance with the documents and information maintained by the Board

Name & Signature of Secretary	Chairman	Accountant (acting)
Ministry of Finance Economic Stabilization and National Policies .	B. Wijayaratne Chairman / CAO / Commissioner Welfare Benefit Board 01st floor New Building Ministry Of Finance	ACCOUNTANT WELFARE BENEFIT BOARD
28/02/23 K.M.M. Siriwardana Secretary to the Treasury and Secretary to the Ministry of Finance, Economic Stabilization and National Policies The Secretariat Colombo 01.		

02

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான தேறிய சொத்துக்களின் மாற்றல் கூற்று

நலன்புரி நன்மைகள் சபை

பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சு

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான தேறிய சொத்துக்களின் மாற்றல் கூற்று

	ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஒதுக்கம்	ஒன்றுதிரண்ட மிகை/(பற்றாக்குறை)	மொத்தம்
2021/01/01 அன்று உள்ளவாறு மீதி	4,584,793.00	-4,257,134.80	327,658.20
கணக்காய்வுக் கட்டணம்-2019		-38,400.00	
ஆண்டுக்கான மிகை/(பற்றாக்குறை)	-	-265,521.02	-265,521.02
2021/12/31 அன்று உள்ளவாறான மீதி	**4,584,793.00**	**-4,561,055.82**	**62,137.18**

	ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஒதுக்கம்	ஒன்றுதிரண்ட மிகை/(பற்றாக்குறை)	மொத்தம்
2022/01/01 அன்று உள்ளவாறு மீதி	4,584,793.00	-4,561,055.82	23,737.18
வருடத்திற்கான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஒதுக்கம்	-		-
ஆண்டுக்கான மிகை/(பற்றாக்குறை)	-	256,799.44	256,799.44
2022/12/31 அன்று உள்ளவாறான மீதி	**4,584,793.00**	**-4,304,256.38**	**280,536.62**

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் மாற்றல் கூற்று

நலன்புரி நன்மைகள் சபை		
பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திடடச் செயற்படுத்துகை அமைச்சு		
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று		
		2022
		ரூபா சதம்
தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்		
ஆண்டுக்கான மிகை/(பற்றாக்குறை)		256,799.44
அதிகரிக்கின்ற தொழிற்பாட்டுச் செலவு		-
சீராக்கம்:		
தேய்மானம்		11,477.75
தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னர் தொழிற்பாட்டு இலாபம்		268,277.19
முன்னைய ஆண்டுச் சீராக்கம்		-38,400.00
வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுசெய்யத்தக்கவைகளில் (அதிகரிப்பு)/குறைவு		3,427.34
கிடைக்கப்பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு)/குறைவு		-
தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட தேறிய காசு		233,304.53
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல்		
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு		-
முதலீட்டு நடவடிக்கைகளில் தேறிய பயன்படுத்தப்பட்ட காசு		-
நிதியிடல் நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல்		
குத்தகைக் கொடுப்பனவு		-
நிதியிடல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு		-
ஆண்டு காலப்பகுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு		233,304.53
ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை		56,086.21
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை		289,390.74
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் பகுப்பாய்வு		
இணைக்கப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.		

வருடத்தின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றை பகுப்பாய்வு செய்தல்.

இணைக்கப்பட்டுள்ள கணக்கிட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுகளின் கட்டாயமான ஒரு பகுதியாகும்.

02. பொது விடயங்கள்

1.1 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1952/22 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமான பத்திரிகை அறிவித்தலின் கீழ் 2016 பெப்ரவரி 15 ஆம் திகதியன்று மீண்டும் தொழிற்பாட்டுக்கு வந்த 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் நலன்புரி நன்மைகள் சபை, 2016 ஜூலை மாதத்தில் தாபிக்கப்பட்டதாகும்.

1.3 நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், அரசியலமைப்புச் சபையின் ஆலோசனையுடன் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் மூன்று வருட காலத்திற்கு 2016 ஜூலை மாதத்தில் நியமிக்கப்பட்ட தலைவரையும் நான்கு உறுப்பனர்களையும் சபை உள்ளடக்கியுள்ளது.

1.3 நலன்புரி நன்மைகள் சபை, செயலகம், கொழும்பு 01 இல் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் புதிய கட்டடத்தில் 1 ஆம் மாடியில் அமைந்துள்ளது.

1.4 நலன்புரி நன்மைகள் சபையின் குறிக்கோள்கள்

- முக்கிய குறிக்கோள், அனைத்து நலன்புரி நன்மைகளையும் செலுத்துவதற்கான கட்டமைப்பை வழங்குதலாகும்.
- நன்மைகளைப் பெறுபவர்களை அடையாளம்காணுவதற்கு வெளிப்படைத்தன்மைமிக்க செயன்முறையை தயாரித்தல்.
- அத்தகைய நன்மைகளை முடிவுறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

நலன்புரி நன்மைகள் சபைச் சட்டத்தின் மூலம் மேற்கூறிய குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு பின்வரும் முக்கிய செயல்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு நலன்புரி நன்மைகள் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது,

- சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அல்லது குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்கள். கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை நிறைவேற்றுதல், செயலாற்றுதல் மற்றும் மேற்கொள்ளுதல்
- சபைக்கு உரித்தளிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரத்தை, மாவட்டச் செயலாளருக்கு, பிரதேச செயலாளருக்கு அல்லது கிராம உத்தியோகத்தருக்கு ஒப்படைத்தல்.
- நலன்புரி நன்மைகள் திட்டங்களைத் தாபித்தல்.
- தகைமைக்கான தகுதிறன்களை தயாரித்தல்.
- திட்டமொன்றின் நியதிகளுக்கமைய நிதி ஒதுக்கீட்டை குறித்துரைத்தல்
- திட்டத்தை ஆரம்பிக்கும் திகதியைக் குறித்துரைத்தல்
- வழங்கப்பட வேண்டிய நிதி மற்றும் ஏனைய நன்மைகளை குறித்துரைத்தல்

- நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆட்கள் உரித்துடையதாகவுள்ள காலப் பகுதியைக் குறிப்பிடுதல்.

1.5. ***நிதிக் கூற்று***

நலன்புரி நன்மைகள் சபையினால் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற காலப் பகுதிக்கான நிதிக் கூற்றுகள் இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

02. ***நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதன் அடிப்படை***

நலன்புரி நன்மைகள் சபையின் நிதிக் கூற்றுக்கள், நிதி நிலை பற்றிய விபரமான அறிக்கை, காசுப் பாய்ச்சல் கூற்று,செலவுக் கூற்று, அதன் நடைமுறை அல்லாத சொத்துகளின் பட்டியல், நிதி கூற்றுக்களுக்கான குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநிருணயங்கள் மற்றும் அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியதாக இந்த நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1 *நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் நாணயம்*

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாயில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

2.2 *தொடர்ந்து இயங்குதல்*

நலன்புரி நன்மைகள் சபையினால் திட்டமிடப்பட்ட கீழே கொடுக்கப்பட்டுள்ள கொள்கைகள், நலன்புரிப் நன்மைகளுக்குப் பொருத்தமான முறைமையாக இருக்கக் கூடிய தொடர்ந்து இயங்கும் அனுமானத்திற்கு ஏற்புடையதாகும்.

2.3 *கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிநிலை கூற்றுக்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள அதேவேளையில், வேறுவிதமாகக் கூறப்பட்டாலன்றி, இந்த நிதிநிலை கூற்றுக்களில் வழங்கப்பட்ட மூன்று ஆண்டு காலப்பகுதிகளிலும் தொடர்ந்து அதைப் பயன்படுத்துவதற்கு நலன்புரி நன்மைகள் சபை எதிர்பார்க்கிறது.*

- ***நிதிநிலை கூற்றுக்கள்***

- *அனைத்து அலுவலக உபகரணங்களும் ஆரம்பத்தில் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. உபகரணங்களின் செலவு என்பது வாங்கும் போது பெறுமதி சேர் வரியுடன் கையகப்படுத்தும் போது ஏற்படும் செலவு ஆகும்.*

- ***விரிவான வருமானக் கூற்றுக்கள்***

(அ) வருமானத்தை அடையாளம் காணுதல்

அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட கட்டுநிதி வருமானமாகக் கருதப்படுகின்றது.

(ஆ) செலவினத்தை அடையாளம் காணுதல்

செலவினக் கூற்றில் செலவுகள், நலன்புரி நன்மைகள் சபையின் நிருவாக மற்றும் பொதுச் செலவுகள், நலன்புரி நன்மை செலவுகள் மற்றும் தொடர்பாடல் செலவுகள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. நலன்புரி நன்மைகள் சபையை நடாத்திச்செல்வதற்காக ஏற்படும் அனைத்து செலவினங்களும் செலவினக் கூற்றுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

(இ) **தேய்மானம்**

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சினால் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களுக்கான தேய்மான ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. நலன்புரி நன்மைகள் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள சொத்துக்களுக்கு மாத்திரம் தேய்மானம் கணக்கிடப்பட்டுள்ளது.

சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்தின் அடிப்படையில் நேர்கோட்டு அடிப்படையில் பின்வருமாறு தேய்மானம் கணக்கிடப்படுகிறது.

தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம்	*20%*
இயந்திர சாதனம்	*33.33%*

(ஈ) *வரிவிதித்தல்*

உழைக்கும் போதுசெலுத்தும் வரி உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அட்டவணை 01 இனை அடிப்படையாகக் கொண்டதாகும்.

5.3 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

5.3 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தேசிய கணக்காய்வு அலுவலகம்

TPD/C/WBB/2022/FA/01 *2023 ஜூலை 06*

தலைவர்
நலன்புரி நன்மைகள் சபை

நலன்புரி நன்மைகள் சபையின் 2022 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீதான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

நலன்புரி நன்மைகள் சபையின் 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதியியல் நிலைக் கூற்று மற்றும் அத்திகதியன்று முடிவுற்ற ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் அத்திகதியன்று முடிவுற்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்குகின்ற 2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதியியல் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 1971இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

சபையின் நிதிக் கூற்றுக்களினூடாக 2022 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான நிதியியல் நிலைமை, அத்திகதியன்று முடிவுற்ற ஆண்டு காலப்பகுதியில் அதன் நிதியியல் செயற்பாடுகள் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பலியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும்

20

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், நிதி கூற்றுக்கள் மற்றும் அது பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்பதாக கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

நிதி கூற்றுக்கள் சம்பந்தமான எனது அபிப்ராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படுவதில்லை. மேலும் நான் அது பற்றி எந்த ஒரு விதத்திலான சான்றுப்படுத்தலையோ அல்லது அபிப்பிராயத்தையோ தெரிவிக்க மாட்டேன்.

நிதி கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வுக்கு உரிய எனது பொறுப்புக்கள் மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்ற போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும்போது ஏனைய தகவல்களை நிதி கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதமாக பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவுக்கு அமைவாக முனைப்பழிவுள்ளதாக பொருந்தாமல் இருக்கின்றதா என்பதை கவனிப்பதாகும்.

2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை வாசிக்கும் போது, அதில் முனைப்பழிவுள்ளதாக பிழையாக காட்டப்பட்டுள்ளது என நான் தீர்மானிக்கும் பட்சத்தில், திருத்திக் கொள்வதற்காக ஆளுகை தரப்பினருக்கு அந்த விடயங்களை தொடர்பாடல் செய்தல் வேண்டும். தொடர்ந்தும் திருத்திக் கொள்ளாமல் பிழையாக காட்டப்பட்டு இருக்குமாயின், அவை அரசியலமைப்பு சட்டத்தின் 156(6) ஆம் பிரிவின் பிரகாரம் என்னால் காலக் கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுகள் பற்றி முகாமைத்துவத்தினதும் ஆளுகைக்குப் பொறுப்பானவர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதியியல் கூற்றுகளை இலங்கை அரசாங்க கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி தயாரித்தலை இயலச்செய்வதற்கு தேவையான உள்ளக நிர்வாகத்தினையும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான தவறுக் கூற்றுகளின்றி அவற்றை நியாயமாக எடுத்துரைப்பதனையும் தயாரிப்பதனையும் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியியல் கூற்றுகளை தயாரிப்பதில் சபை தொடர்ச்சியான இயங்கும் ஆற்றலைத் திர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருக்கின்ற அதேவேளையில் சபையினை தீர்த்துக் கட்டுவதற்கு முகாமைத்துவம் உத்தேசிக்கின்ற போது அல்லது மாற்று வழியொன்று காணப்படாத போது அவ்வாறு செய்வதற்கு உத்தேசிக்கின்ற போது தவிர, தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்குகளைப் பேணுவதற்கும் சபையின் தொடர்ச்சியுடன் தொடர்புடைய விடயங்களை வெளியிடுவதற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

சபையின் நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கும் செயன்முறையினை பரிசீலனை செய்வது ஆளுகைத் தரப்பினர் பொறுப்பாகும்.

21

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் நியதிகளுக்கு அமைய சபையின் ஆண்டறிக்கையினையும் நிதியியல் கூற்றுகளையும் உரிய காலத்தில் தயாரிப்பதனை இயலச்செய்கின்ற விதத்தில் அதன் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் முறையாகப் பேணுவதற்கு சபை வேண்டப்பட்டுள்ளது.

1.5 நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதியியல் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்வுக் கூற்றொன்று காணப்படுகையில், அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்வுக் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாகக் கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வு முழுவதன் போதும் நான் தொழில்சார் நிபுணத்துவ தீர்புடனும் தொழில்சார் நிபுணத்துவ சந்தேகத்துடனும் செயற்பட்டுள்ளேன். அத்துடன்;,

- *குறிப்பிடப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வகுப்பதில் மோசடி அல்லது தவறு காரணமாக நிதியியல் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பீடு செயயும்பொருட்டு, முறையான, பொருத்தமான மற்றும் உரியகால கணக்காய்வு நடைமுறைகள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்பட்டன. உடந்தையாகவிருத்தல், ஆவணங்களை போலியாகப் புனைதல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்கள் காரணமாக மோசடிகள் நிகழுகின்றமையால், மோசடி மூலம் ஏற்படும் தாக்கமானது பொருண்மையான பிறழ்வுக் கூற்றொன்றைக் விடவும் மிகவும் தீவிரமிக்கதாகும்.*

- *சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்லாத போதிலும், சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.*

- *பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாட்டினையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் அத்துடன் முகாமைத்துவம் மூலம் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களையும் மதிப்பிடுதல்.*

- *பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபையின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்*

22

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா எனத் தீர்மானித்தல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதியியல் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாகக் காணப்படாதிருக்கையில், எனது அபிப்பிராயம் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை சபை இடைநிறுத்துவதற்குக் காரணங்களாக அமையலாம்.

- நிதியியல் கூற்றுக்களின் கட்டமைப்பினதும் உள்ளடக்கங்களினதும் அடிப்படையினைத் தோற்றுவிக்கின்ற கொடுக்கல்வாங்கல்களின் மற்றும் நிகழ்வுகளின் பொருத்தமான மற்றும் நியாயமான உட்சேர்த்தல் மற்றும்ஃஅத்துடன் வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதியியல் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பனவற்றை மதிப்பீடுசெய்தல்.

என்னுடைய கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் உள்ளடங்கலாக ஏதாவது முக்கிய உள்ளகக் கட்டுப்பாடுளிலுள்ள குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு அறிவிக்கப்படும்.

2. ஏனய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், பின்வரும் தேவைப்பாடுகளிற்காக விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன:

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்கு அவசிமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரிசீலனையின் மூலம் தென்படுகின்றவாறு சபையினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3. 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை காரணமாக பின்வரும் கூற்றுகளை மேற்கொள்வதில் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை:

2.2.1 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், வழமையான தொழில் செயற்பாடுகளிற்கு வெளியே சபை செய்துகொண்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் சபையின் ஆளுகைச் சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

2.2.2 *2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், ஏதேனும் தொடர்புடைய ஏழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது ஏதேனும் வேறு பொதுவான அல்லது சபையின் ஆளுகைச் சபையினால் வழங்கப்பட்ட விசேட பணிப்புரைகளுடன் இணங்கியொழுகாமையினைக் குறிப்பிடுதல்.*

	சட்டங்கள், விதிகள்/ கட்டளைகளுக்கான உசாத்துணை	அவதானிப்புகள்
(அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) பிரிவு	கணக்காய்வாளர் அதிபதிக்கு வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2022 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2023 ஜூன் 30 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.
(ஆ)	2002 ஆம் ஆண்டில் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவு	நலன்புரி நன்மைகள் சபை, தலைவரையும் அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற 4 உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டிய போதிலும், 2022 ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை தலைவர் ஒருவரும் ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை இரண்டு உறுப்பினர்கள் இல்லாமலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

2.2.3 *2018 இன் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்படுத்தலுக்கு அமைவாக, அதன் அதிகாரங்களுக்கு, கடமைகளுக்கு மற்றும் பணிகளுக்கு முரணாக செயலாற்றியுள்ளது எனக்குறிப்பிடுதல்.*

2022 ஆம் ஆண்டளவில் நலன்புரி நன்மைகள் சபை தாபிக்கப்பட்டு 06 வருடங்களை தாண்டியுள்ள போதிலும், அதன் பிரதான பணியாகிய, சமூக பாதுகாப்பு வலைக் கருத்திட்டம் (SSNP) மற்றும் அதன் பெறுபேறாகிய, ஒருங்கிணைந்த நலன்புரியை முகாமை செய்வதும், தகவல் தொழில்நுட்ப கொள்கைகளை தயாரிப்பதும், நலன்புரி நன்மைகளை செலுத்துவதற்காக பயனாளிகளை அடையாளம் காணுவதற்காக பொதுவான தகுதிறன்கள் மற்றும் குறிகாட்டிகளை தயாரித்தல், அத்துடன் சிறந்த நிபுணத்துவத்தை கொண்ட பதவினர்களை ஆட்சேர்ப்பு செய்தல் என்பன 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.4 *2018 இன் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவிற்கு அமைவாக சபையின் சொத்துகள் தொடர்புடைய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தொடர்புடைய காலப்பகுதியின் போது சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கதாகவும், செயல்திறன்மிக்கதாகவும், பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை எனக் குறிப்பிடுதல்.*

2.3 ஏனைய விடயங்கள்

(அ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கத்தின் கீழ் நலன்புரி நன்மைகள் சபையின் அடிப்படை நோக்கம், இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்காக ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவத் தொகுதி ஒன்றை தயாரிப்பதும், நலன்புரி நன்மைகளை

24

செலுத்துவதற்கு தகுதியான நபர்களை தெரிவுசெய்து நன்மைகளை செலுத்துகின்ற போதிலும், 2022 டிசம்பர் 31 வரையிலும் அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தொகுதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2022.12.31 ஆம் திகதியில் காணப்பட்ட பதவியினர் தகவல்களுக்கு அமைவாக அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 17 ஆகக் காணப்பட்ட அதேவேளையில், அதில் 03 பதவிகளில் 05 வெற்றிடங்களும், 01 பதவியில் மிகையொன்றும் காணப்பட்டன.

ஒப்பம்/ டப்ளியூ.பி.சி. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

5.9 கணக்காய்வு அறிக்கைக்கு அமைவாக விடயங்களுக்கான விளக்கங்கள்

5.4 கணக்காய்வு அறிக்கைக்கு அமைவாக விடையங்களுக்கான விளக்கம்

நலன்புரி நன்மைகள் சபை

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

MF/WBB/ACCT/AU.Q/2023 *2023.06.21*

சிரேட்ட உதவி கணக்காய்வாளர் அதிபதி

தேசிய கணக்காய்வு அலுவலகம்

நலன்புரி நன்மைகள் சபையின் *2022* டிசம்பர் *31* இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீதான *2018* இன் *19* ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் *12* ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் சுருக்கமான அறிக்கை.

மேற்குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக தங்களின் இலக்கம் *TPD/C/23/49/WBB/FA/01* மற்றும் *2023.06.20* ஆம் திகதிய கணக்காய்வு விசாரணைகள் தொடர்பானது.

02. அதன் பிரகாரம், அதில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இதில் உள்ள பின்னிணைப்புக்கு அமைவாக தங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன் என்பதை தயவுடன் அறியத்தருகிறேன்.

ஒப்பம்/ பி.விஜயரத்ன
தலைவர்/ ஆணையாளர்

26

2.2.2. (அ), (ஆ), (இ), (ஈ) ஆகியவற்றின் கீழ் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக எதிர்வரும் வருடங்களில் கணக்குகளை தயாரிக்கும் போது உரிய கவனத்தை செலுத்தி, தொடர்புடைய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

(உ) 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதியளவில் 2022 ஆம் ஆண்டுக்குரிய செயலாற்றுகை அறிக்கையை தயாரித்து கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்க முடியாமல் போயுள்ள அதேவேளையில், தற்போது அதனை தயாரித்து கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.2.3. (அ) உங்களது அவதானிப்புகளுடன் உடன்படுகிறேன்.

2.3. (அ) 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை நலன்புரி நன்மைகள் சபைக்கு தலைவர் ஒருவரையும் பணிப்பாளர் சபை ஒன்றையும் நியமிக்காததன் காரணமாக முழுமையான பதவியினர் இந்த சபையில் இல்லாதிருந்தபடியினால், 2022 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு எஞ்சியுள்ளது.

(ஆ) சமூக வலைப் பாதுகாப்பு கருத்திட்டத்தில் கடமையாற்றிய திரு. ஜீ.எல்.சீ. பெரேரா அவர்கள் (அ.ப.உ.) 2022.09.27 ஆம் திகதியிலிருந்து நலன்புரி நன்மைகள் சபைக்கு இணைக்கப்பட்டுள்ள அதேவேளையில், 2022.09.27 ஆம் திகதியிலிருந்து 2022.09.30 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அவர் நிறைவேற்றிய மேலதிக நேர கடமைக்கரிய ரூபா 1,701.00 தொகை இந்த சபையினால் நிதி அமைச்சுக்கு மீள்நிரப்பல் செய்யப்பட்டுள்ளது.

தவறுதலாக போக்குவரத்து செலவுகள், சம்பளம் மற்றும் ஏனைய செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில், எதிர்காலத்தில் அதனை திருத்திக்கொள்வதற்கு குறித்து வைத்துக் கொண்டேன்.

(இ) இந்த செலவினங்களை பதிவுசெய்யும் போது ஏற்பட்ட தாமதப் பிழையின் காரணமாக அது எழுது பொருட்கள் விடயத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள அதேவேளையில், எதிர்வரும் வருடங்களில் கணக்குகளை தயாரிக்கும் போது இதனை திருத்திக்கொள்வதற்கு குறித்து வைத்துக் கொண்டேன்.

(ஈ) திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) கையடக்கத் தொலைபேசி தவறுதலாக நிலையான சொத்து ஒன்றாக அடையாளம் காணப்படாததன் அடிப்படையில், இந்த நிலைமை ஏற்பட்டுள்ள அதேவேளையில், எதிர்வரும் வருடங்களில் கணக்குகளை தயாரிக்கும் போது இதனை சரியாக சீராக்கம் செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

(ஊ) 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து நலன்புரி நன்மைகள் சபைக்கு ஆணையாளர் ஒருவரும் பணிப்பாளர் சபையும் இல்லாதிருந்த அதேவேளையில், 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஆணையாளர் ஒருவரும் பணிப்பாளர் சபையும் நியமிக்கப்பட்டதன் பின்னர், நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுக்கு பொருத்தமான நபர்களை தெரிவுசெய்வதற்கு தேவையான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இந்த செயல்முறைக்கு தேவையான சட்டத்தை நிறைவேற்றிக் கொள்வது அதன் பின்னர் இடம்பெற்றது. அடுத்த படிமுறையாக நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பொது மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்ட அதேவேளையில், இரண்டு சந்தர்ப்பங்களில் விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் கால எல்லை நீடிக்கப்பட்டது. மேலும், இது முழுமையாக கணினித் தொகுதி ஒன்றினூடாக தொழிற்படுகின்ற செயல்முறையாக இருக்கின்றபடியினால், அதற்கான உத்தியோகத்தர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்க வேண்டி ஏற்பட்டபடியினாலும், ஒரு சில அரசாங்க உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒத்துழைப்பை வழங்காமல் விலகிக் கொண்டபடியினாலும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை உரிய கால

எல்லைக்குள் நடைமுறைப்படுத்த முடியாமல் போனது. தற்போது இந்த நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

(எ) நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

பெயர்	பதவி	நியமிக்கப்பட்ட திகதி	கடமையை பொறுப்பேற்ற திகதி
பி. விஜயரத்ன	தலைவர்/ ஆணையாளர்	*2022.07.07*	*2022.07.26*
ஏ. தேஷப்பிரிய	உறுப்பினர்	*2022.07.07*	*2022.07.25*
எச்.ரீ. கே. பத்மசிறி	உறுப்பினர்	*2022.07.07*	*2022.07.25*
கே.துனுசிங்ஹ	உறுப்பினர்	*2022.09.16*	*2022.09.21*
கே.எச்.ஜே. மலர்	உறுப்பினர்	*2022.09.22*	*2022.09.23*

(ஏ) உடன்படுகிறேன். 2018.07.16 ஆம் திகதியிலிருந்து 02 பிரதி ஆணையாளர் பதவிகள் இல்லாதொழிக்கப்பட்டு, மேலதிக ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர் பதவிகள் 01 வீதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

28

6 ஆம் அத்தியாயம் - மனித வள விவரம்

தொழில் வகுதி	**பதவி**	**அனுமதிக்கப் பட்ட பதவியணி**	**தற்போது இருக்கின்ற எண்ணிக்கை**
	தலைவர் / ஆணையாளர்	1	1
HM 1-1	*மேலதிக ஆணையாளர்*	1	1 *(பதில் கடமை)*
MM 1-1	*பிரதி ஆணையாளர்*	1	-
MM 1-1	*உதவி ஆணையாளர்*	1	1 *(பதில் கடமை)*
HM 1-3	*கணக்காளர்*	1	1 *(பதில் கடமை)*
MA - 3	*அபிவிருத்தி உத்தியோகத்தர்*	1	*1 (நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சினால் இணைக்கப்பட்டுள்ளார்)*
MA 1-2	*முகாமைத்துவ உதவியாளர்*	2	*3 (நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சினால் இணைக்கப்பட்டுள்ளார்)*
PL-1	*அலுவலக பணி உதவியாளர்*	2	*2 (நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சினால் இணைக்கப்பட்டுள்ளார்)*
PL-3	*சாரதி*	2	1
	மென்பொருள் விருத்தி யாளர்	1	*1 (ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்.)*
	முறைமை கட்டுப்பாட்டாளர்	1	*1 (ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்.)*
	தகவல் தொழில்நுட்ப நிறைவேற்றுநர்	2	*1 (ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்.)*
	உதவிக் கரும பீட செயற்பாட்டாளர்	3	-

பதவியின் நிலை	**அனுமதிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை**	**தற்போது இருக்கின்ற எண்ணிக்கை**
சிரேட்ட நலை	4	4
இரண்டாம் நிலை	3	4
ஆரம்ப நிலை	4	3
மென்பொருள் விருத்தியாளர்	1	1
முறைமை கட்டுப்பாட்டாளர்	1	1
தகவல் தொழில்நுட்ப நிறைவேற்றுநர்	2	1
உதவிக் கரும பீட செயற்பாட்டாளர்	3	0
மொத்தம்	**18**	**14**

7 ஆம் அத்தியாயம் -பொறுப்புக்களை நிறைவேற்றும் போது முகங்கொடுத்த சவால்கள் மற்றும் பிரச்சனைகள்

நலன்புரி நன்மைகள் சபையின் உறுப்புக்களை நிறைவேற்றும் போது,

- *போதுமான அளவு பதவியினர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு இருக்கவில்லை.*
- *IWMS தளத்தை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தும் போது ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சனைகள் மற்றும் தொழில்நுட்ப அறிவைக் கொண்ட மனித வளங்களின் பற்றாக்குறை.*
- *தரவு கணக்கெடுப்புகளை நடைமுறைப்படுத்தும் போது தரவுகளை பெற்றுக் கொள்வதற்காக அஸ்வெசும சம்பந்தமாக மக்களினதும் கணக்கெடுப்பு உத்தியோகத்தர்களினதும் விழிப்புணர்வு இல்லாமை. பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகங்களிலும் உள்ள உத்தியோகத்தர்களுக்கு தரவுகளை திரட்டும்போது பல்வேறு தரப்பினர்களிடமிருந்து வந்த எதிர்ப்புகள் போன்றவற்றை சுட்டிக்காட்ட முடியும்.*